## 2022 ஆகஸ்ட் 03 ஆம் திகதி, புதன்கிழமை

## ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தல் மற்றும் வைபவம் தொடர்பான நிருபம்

2022 ஆகஸ்ட் 03 ஆம் திகதி புதன்கிழமை கௌரவ சனாதிபதி அவர்கள் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பித்துவைப்பார்.

**பாராளுமன்றத்தை அடைதல்:** பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகப் பிந்தியது மு.ப. 9.40 மணிக்குள் பாராளுமன்றத்திற்கு வருகைதர வேண்டும். உறுப்பினர்கள் தமது வாழ்க்கைத் துணைகளுடன் வருகையளிப்பார்களாயின், அவர்கள் பொதுமக்கள் நுழைவாயிலில் தமது வாகனங்களிலிருந்து இறங்க வேண்டும். மற்ற எல்லா உறுப்பினர்களும் உறுப்பினர் நுழைவாயில் அருகில் தமது வாகனங்களிலிருந்து இறங்க வேண்டும். உறுப்பினர்களின் வருகைக்கு வசதியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள வாகனச் சுட்டுத் துண்டை தமது வாகனத்தின் முன்பக்க வளித்திரையின் உள்ளே இடதுபக்க மேல் மூலையில் ஒட்டிவைக்குமாறு உறுப்பினர்கள் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பாராளுமன்றத்திற்கு வருகை தந்ததும் உறுப்பினர்களின் வாகனங்கள் பொலிசாரால் அவற்றுக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

**நடைமுறை:** பாராளுமன்ற உறுப்பினர்கள், உறுப்பினர்களின் கூடங்களில் நுழைவதுடன் வாக்கழைப்பு மணி ஒலிக்கும் வரை அங்கு தங்கியிருத்தல் வேண்டும்.

கௌரவ சனாதிபதி அவர்கள் பாராளுமன்றக் கட்டடத்தின் பிரதான வாயிலை மு.ப. 9.55 மணிக்கு வந்தடைவார்கள். கௌரவ சபாநாயகரும் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும் கௌரவ சனாதிபதி அவர்களை வரவேற்றுப் பாராளுமன்றக் கட்டடத்திற்கு அழைத்துச் செல்வார்கள். அதன்பிறகு, கௌரவ சனாதிபதி அவர்களை கௌரவ சபாநாயகரும் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும் கௌரவ சனாதிபதியின் கொலுவறைக்கு அழைத்துச் செல்வார்கள்.

**சபாமண்டப நிகழ்ச்சிகள்:** மு.ப. 10.25 மணிக்கு வாக்கழைப்பு மணி ஐந்து நிடங்களுக்கு ஒலிக்கும். அப்போது எல்லா உறுப்பினர்களும் தத்தமது ஆசனங்களில் அமர்வார்கள். பாராளுமன்ற சபாமண்டபத்துக்கு சமுகமளிக்கும் கௌரவ சனாதிபதியின் பவனி மு.ப. 10.30 மணிக்கு சபாமண்டபத்தை அடையும். கௌரவ சனாதிபதி அவர்கள் மண்டபத்துள் வந்தமை அறிவிக்கப்பட்டதும் சகல உறுப்பினர்களும் அதன்போது எழுந்து நிற்றல் வேண்டும். கௌரவ சனாதிபதி அக்கிராசனத்தை அடைந்து உறுப்பினர்களை அமரும்படி கேட்டுக்கொள்ளும் வரை சகல உறுப்பினர்களும் எழுந்து நிற்றல் வேண்டும்.

கௌரவ சனாதிபதி அவர்கள் அதன் பின்னர் பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரின் வைபவ ரீதியான அமர்விற்கு தலைமை தாங்குவார்கள். அதனைத் தொடர்ந்து, பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பு மற்றும் பாராளுமன்றத்தைக் கூட்டுதல் பற்றிய பிரகடனத்தை வாசிப்பார். அதன் பின்னர் கௌரவ சனாதிபதி அவர்கள் பராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய பின்னர், கௌரவ சனாதிபதி அவர்கள் 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிவரை பாராளுமன்றத்தை ஒத்திவைப்பார்கள்.

இதனையடுத்து, கௌரவ சனாதிபதி அவர்கள் கௌரவ சபாநாயகர், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோரால் சபாமண்டபத்தைவிட்டு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

தம்மிக்க தசநாயக்க
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்